මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01, இலங்கை.
The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011-2484500, 011-2484600, 011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: ITM/03/04/08
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2024.08.26

தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம்: *01/2024*

**அமைச்சுக்களின் செயலாளர்கள்**
**மாகாண பிரதம செயலாளர்கள்**
**திணைக்களத் தலைவர்கள்/ மாவட்ட செயலாளர்கள்**
**அரச கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மற்றும்**
**நியதிச் சட்டமுறைச் சபைகள் மற்றும் அரசுக்கு சொந்தமான கம்பனிகளின் தலைவர்கள் யாவருக்கும்**

**அரச சேவைகளின் வினைத்திறனையும் தரத்தையும் மேம்படுத்துவதற்காக அரசாங்க தகவல் தொழில்நுட்ப முறைமைகளுக்கு ஏற்புடையதான விதத்தில் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை/ கடவுச்சீட்டு இலக்கத்தை/ கம்பனிகளின் பதிவு இலக்கத்தை சேர்ப்பதனை கட்டாயமாக்குதல்**

அரச சேவைகளின் வினைத்திறனையும் தரத்தையும் மேம்படுத்துவதற்காக அரசாங்க தகவல் தொழில்நுட்ப முறைமைகளுக்கு ஏற்புடையதான விதத்தில் **தேசிய அடையாள அட்டை இலக்கத்தை/ கடவுச்சீட்டு இலக்கத்தை/ கம்பனிகளின் பதிவு இலக்கத்தை** சேர்ப்பதனை கட்டாயமாக்குவதற்காக நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட 2024.07.24 ஆம் திகதி 24/1488/604/161 எனும் இலக்கத்தை கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக 2024 ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதியன்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது அங்கீகாரம் கிடைத்துள்ளது.

02. அதன் பிரகாரம் அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்டமுறை சபைகள் உட்பட சகல அரசாங்க நிறுவனங்களிலும் தற்போது பாவனையில் உள்ள மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட உள்ள சகல தகவல் தொகுதிகளுக்கும் தரவுகளை சேர்க்கும்போது நபர்களின்/ நிறுவனங்களின் அடையாளத்தை அடையாளம் காணுவதற்காக கீழே I முதல் III வரை குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை சேர்ப்பதனை கட்டாயமாக்கும் விதமாக,

- **தற்போது காணப்படும் தரவுத் தொகுதியில் அதற்கு அமைவாக தேவையான விதத்தில் அபிவிருத்தி செய்வதற்கும்,**
- **எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட உள்ள தரவு தொகுதியில் அதற்கு அமைவாக திட்டமிட்டு அபிவிருத்தி செய்வதற்கும்,**

நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

I. **இலங்கை குடியுரிமை / இரட்டை குடியுரிமை உரித்தான** நபர்களின் (இலங்கையில் வசிப்பவர்கள் / இலங்கைக்கு வெளியே வசிப்பவர்கள்) அடையாளத்தை அடையாளம் காணுவதற்கு **தேசிய அடையாள அட்டை இலக்கத்தை*** உள்ளிடுவது கட்டாயமாகும்.

II. வெளிநாட்டு பிரஜைகளின் அடையாளத்தை அடையாளம் காணுவதற்கு **வெளிநாட்டு கடவுச்சீட்டுடன் தேசிய இனத்தை (Nationality)** உள்ளிடுவது கட்டாயமாகும்.

III. ஒரு நிறுவனத்தை அடையாளம் காணுவதற்கு, **கம்பனியின்/ வணிகத்தின் பதிவு இலக்கத்துடன்**, அந்த நிறுவனங்களின் உரிமையாளர்களின்/ பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் மேற்கூறிய வகுதி I இல் சேர்க்கப்பட்டுள்ள நபர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும் வகுதி II இல் சேர்க்கப்பட்டுள்ள் நபர்களின் **வெளிநாட்டு கடவுச்சீட்டு இலக்கத்துடன் தேசிய இனத்தை** (Nationality) உள்ளிடுவது கட்டாயமாகும்.

[*தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பது தற்போது பயன்பாட்டில் உள்ள ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது அதற்குப் பதிலாக எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ள தேசிய அடையாள அட்டை இலக்கம் எனப் பொருள்படும்.]

03. தற்போது பயன்படுத்தப்படுகின்ற தகவல் தொழில்நுட்ப முறைமை அதேபோன்று, விருத்தி செய்து வருகின்ற தகவல் தொழில்நுட்ப முறைமையையும் மேற்குறிப்பிட்ட 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவாறு 2025 ஆம் ஆண்டுக்குள் விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும், அதற்குத் தேவையான நிதி ஏற்பாட்டை 2024.08.12 ஆம் திகதிய தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை **இலக்கம் 02/2024 இல் 03.1(i)** எனும் பிரிவுக்கு அமைவாக 2025 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் நடுத்தர கால வரவுசெலவுத் திட்ட வரைசட்டகத்திற்குள் 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளுக்காக சேர்த்துக் கொள்வதற்கும் சகல நிறுவனங்களின் தலைவர்கள் கவனம் செலுத்துதல் வேண்டும்.

04. தகவல் தொழில்நுட்ப முறைமைக்கு இந்த தரவுகளை உள்ளிடுதல் மற்றும் பேணிவருதல் என்பன 2022 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தரவுப் பாதுகாப்பு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள **2023.09.21** ஆம் திகதிய **MOT/2023/02** எனும் இலக்கத்தைக் கொண்ட சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் ஆகியவற்றின்படி மேற்கொள்வதற்கும் அந்தத் தரவுகளை முறையான விதத்தில் ஏனைய அரசாங்க நிறுவனங்களுடன் பரிமாறிக்கொள்ளக் கூடிய விதத்தில் தரவுகளை தரப்படுத்தல் (Data Standardization) செய்வதற்கும் சகல நிறுவனங்களினதும் தலைவர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

05. மேற்குறிப்பிட்ட 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தங்களது நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப தொகுதியை அபிவிருத்தி செய்வதற்கு முன்னர் நிகழ்நிலையின் மூலம் தரவுகளை பரிமாற்றிக் கொள்வது பற்றிய கூட்டிணைப்பு நடவடிக்கைகளுக்காக தொடர்புடைய திணைக்களங்களின் பின்வரும் உத்தியோகத்தர்களை தொடர்பு கொள்ளுதல் வேண்டும்.

| தொடர் இலக்கம் | நிறுவனம் | பதவி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| *1* | ஆட்பதிவுத் திணைக்களம் | ஆணையாளர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) | *011 522 6104* |
| | | ஆணையாளர் (தகவல் தொழில்நுட்பம்) | *011 522 6127* |
| *2* | குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் | கட்டுப்பாட்டாளர் (தகவல் தொழில்நுட்பம்) | *011 210 1530* |
| | | உதவிக் கட்டுப்பாட்டாளர் (தகவல் தொழில்நுட்பம்) | *011 277 7531* |
| *3* | கம்பனி பதிவாளர் திணைக்களம் | பிரதி கம்பனி பதிவாளர் நாயகம் | *011 268 9206* |
| | | பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) | *011 268 9870* |
| *4* | பதிவாளர் நாயகம் திணைக்களம் | சிரேட்ட பிரதிப் பதிவாளர் நாயகம் | *011 288 9540* |
| | | உதவிப் பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) | *011 288 9518* |

*06.* இந்த சுற்றறிக்கை ஆட்பதிவுத் திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், கம்பனி பதிவாளர் திணைக்களம் மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களம் ஆகியவற்றின் உடன்பாட்டின் அடிப்படையில் வெளியிடப்படுகின்றது.

*07.* இந்த சுற்றறிக்கை சம்பந்தமாக மேலதிக விளக்கங்கள் தேவைப்படுமாயின் ***0112484763*** எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் (கொள்கை மற்றும் அபிவிருத்தி) அவர்களை அல்லது ***0112034531*** எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் பணிப்பாளர் (கொள்கை மற்றும் அபிவிருத்தி) அவர்களை தொடர்பு கொள்ளவும்.

**ஒப்பம்/ கே.எம்.மஹிந்த சிறிவர்தன**
**செயலாளர்**

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு**

**பிரதிகள்:** ***01. சனாதிபதியின் செயலாளர்***

***02. பிரதமரின் செயலாளர்***

***03. அமைச்சரவையின் செயலாளர்***

***04. கணக்காய்வாளர் அதிபதி***

***05. செயலாளர், நிதி ஆணைக்குழு***

அமைச்சரவை விஞ்ஞாபனம்

2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தரவுப் பாதுகாப்புச் சட்டம்

வரவு செலவுகளை கோருதல் 2025

MoT/2023/02 சுற்றறிக்கை

பின்னிணைப்பு

01/2024 ஆம் இலக்க தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ சுற்றறிக்கையின் 05 ஆம் இலக்க பந்தி சம்பந்தமாக எந்த ஒரு விடயத்திற்கும் விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்காக தொடர்பு கொள்ளக்கூடிய உத்தியோகத்தர்களின் தகவல் கீழே கட்டப்பட்டுள்ளது.

| **தொடர் இலக்கம்** | **நிறுவனம்** | **பெயர்** | **பதவி** | **தொலைபேசி இலக்கம்** |
|---|---|---|---|---|
| 1 | ஆட்பதிவுத் திணைக்களம் | திருமதி. எஸ்.ஏ.ஈ.டபிள்யு. குலரத்ன | ஆணையாளர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) | 077 337 4712 |
| | | திருமதி. எம்.ஈ. வீரசிங்ஹ | ஆணையாளர் (தகவல் தொழில்நுட்பம்) | 071 254 1440 |
| 2 | குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் | திரு. எச்.எம்.ஐ.கே.ஹேரத் | கட்டுப்பாட்டாளர் (தகவல் தொழில்நுட்பம்) | 071 670 0934 |
| | | திருமதி. ஜே.எம்.என்.என். செனெவிரத்ன | உதவிக் கட்டுப்பாட்டாளர் (தகவல் தொழில்நுட்பம்) | 071 397 2510 |
| 3 | கம்பனி பதிவாளர் திணைக்களம் | திரு. தரங்க பண்டித | பிரதி கம்பனி பதிவாளர் நாயகம் | 077 372 8855 |
| | | திரு. கீர்த்தி சிறிவர்தன | பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) | 071 482 4873 |
| 4 | பதிவாளர் நாயகம் திணைக்களம் | திருமதி. லக்ஷிகா கணேபொல | சிரேட்ட பிரதிப் பதிவாளர் நாயகம் | 077 753 7952 |
| | | திருமதி. ஜீ. அமரசிங்ஹ | உதவிப் பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) | 071 650 0184 |

சுற்றறிக்கை சம்பந்தமாக மேலதிக விளக்கங்கள் தேவைப்படுமாயின் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவப் பிரிவின் பின்வரும் உத்தியோகத்தர்களை தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

| **தொடர் இலக்கம்** | **பெயர்** | **பதவி** | **தொலைபேசி இலக்கம்** |
|---|---|---|---|
| 1 | திரு. உதேஷ் இ.வி.செனெவிரத்ன | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (கொள்கை மற்றும் அபிவிருத்தி) | 071 489 9629 |
| 2 | திருமதி. சத்துரி செனெவிரத்ன | பணிப்பாளர் ( கொள்கை மற்றும் அபிவிருத்தி) | 076 608 3667 |